www.padippakam.com


# வானவில்

VAANAVIL
ISSUE – 37 JANUARY 2014

இதழ் - 37 தை 2014


# உலக வல்லாதிக்க சக்திகளின் சூழ்ச்சித் திட்டங்களை இலங்கை மக்கள் உறுதியுடன் எதிர்க்க வேண்டும்!

இலங்கையின் பிரதான பிரச்சினையாக இனப்பிரச்சினையை நிலைநிறுத்தி வந்த உள்நாட்டு சிங்கள – தமிழ் இனவாத பிற்போக்கு சக்திகளும், அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களும், தொடர்ந்தும் அந்தப் பாதையிலேயே இலங்கையைத் கொண்டு செல்ல எத்தனிப்பதை சமீபத்தைய அரசியல் போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன.

எமது நாட்டில் இனங்களுக்கிடையில் மோதலை உருவாக்கும் பொருட்டு திட்டமிட்ட முறையில் சில காரியங்களைச் செய்துவிட்டுத்தான் 200 வருடங்களுக்கும் மேலாக எமது நாட்டை ஆண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் 1948இல் நாட்டை விட்டுச் சென்றார்கள். அவர்கள் திட்டமிட்டவாறு 1948இல் அவர்கள் வெளியேறிச் சென்று சரியாக 10 வருடங்களில் நேரம் கணித்து வைத்த வெடிகுண்டைப்போல 1958இல் முதலாவது இன வன்செயல் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாகப் பின்னர் 1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் மேல் சிங்களப் பேரினவாத சக்திகளால் இனவன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இது பிரித்தானியர் தமது குடியேற்ற நாடுகளில் மேற்கொண்ட 'பிரித்து ஆள்' (Divide and Rule) என்ற கெட்ட தந்திரத்தின் வெளிப்பாடாகும். அவர்களின் இந்தக் கீழ்த்தரமான தந்திரம் இலங்கையில் மட்டுமின்றி, இந்தியா உட்பட அவர்கள் ஆதிக்கம் செலுத்திய தென்னாசிய நடுகள் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டதனால், இந்த நாடுகளில் காலத்துக்காலம் எரிமலை குமுறுவது போல, இனவன்செயல்கள் வெடித்துக் கிளம்புவதைக் காணலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இதில் ஒரு குறிப்பிட்ட அம்சம் என்னவெனில், 1948இல் பிரித்தானியர் நாட்டைவிட்டு வெளியேறும் போது, தமக்கு மிகவும் விசுவாசமான எந்த ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றார்களோ, அதே ஐ.தே.கதான் தமிழ் மக்களுக்கு எதிரான சகல இனவன்செயல்களையும் முன்னின்று நடாத்தியது. சுதந்திரம் கிடைத்தவுடன் முதலாவதாக அமைந்த அதே ஐ.தே.க அரசுதான் தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தது. அதே அரசுதான் இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்தது. இறுதியாக அதே




ஐ.தே.க அரசுதான் தமிழ் மக்களுக்கு எதிரான போரையும் ஆரம்பித்து வைத்தது.

ஐ.தே.க அரசின் இந்த சிறுபான்மை இனங்களுக்கு எதிரான செயற்பாடுகளைத்தான், பின்னால் வந்த எல்லா இலங்கை அரசுகளும் பின்பற்றின. அதற்கு இனவாதத்தை நம்பி அரசியல் நடாத்திய தமிழ் இனவாத சக்திகள் மறுபக்கத்தில் இருந்து பங்களிப்பு வழங்கின. இவர்கள் இருபகுதியினரதும் அரசியல் சூதாட்டத்தில் அனைத்தையும்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

## வாழ்த்துக்கள்

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த புத்தாண்டு, தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆசிரியர் குழு

நூறு சிந்தனை மலரட்டும்

www.padippakam.com

# நான்காவது ஆண்டில் தடம்பதிக்கும் வானவில்

கடந்த மூன்று ஆண்டுகளில் 36 வானவில் இதழ்கள் வெளியாகியுள்ளன. இவ்வாண்டு தை மாதத்தில் உங்கள் கைகளில் கிடைக்க வேண்டிய 37வது வானவில் இதழ், சரியாக ஒரு மாதத்தின் பின்னர் மாசி மாதத்தில் வெளிவருகின்றது. காலம் பிந்தினாலும் ஒரு வருடத்திற்கு 12 இதழ்களை வெளிக்கொணர வேண்டும் என்பதில் இதுவரையில் நாம் உறுதியாக இருக்கின்றோம். வானவில் ஒரு மாதம் பிந்தி வருவதனால், நடப்பு மாதத்தில் நிகழ்ந்தவைகள் தொடர்பான பிரதிபலிப்பும் ஒரு மாதம் பிந்தியே வானவில்லில் வெளிவருகின்றது என்பதை உங்களைப்போலவே நாமும் உணரத் தவரவில்லை. கருத்துகள் சற்று தாமதமாக வெளிப்படுத்தப்பட்டாலும், அது எந்த வகையிலாவது மக்களை சென்றடைய வேண்டும் என்பதே எமது நோக்கமாக இருக்கின்றது.

வர்த்தக ரீதியிலாக இலங்கையில் வெளிவந்து கொண்டிருக்கும் தினசரி செய்திப்பத்திரிகைகளை தவிர்த்து, இலங்கை நிலவரங்களை பிரதானமாக முன்வைத்து, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கலை, இலக்கியம் சார்ந்தோ அல்லது சமூக, அரசியல், பொருளாதாரம் சார்ந்தோ அச்சுப்பதிப்பில் தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளை மற்றும் சஞ்சிகைகளை விரல்விட்டு எண்ணி விடலாம். அந்த வகையில் கனடாவை தளமாகக்கொண்டு வானவில் மூன்றாண்டுகளுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருப்பது குறித்து நாங்கள் உண்மையிலே பெருமைப்படுகின்றோம். அத்துடன் வானவில் மாதிரி குறிப்பிட்டு சொல்லக்கூடியவாறு, இலங்கை பிரச்சனைகளை முன்வைத்தும் பிற்போக்கு தமிழ் தேசியவாதத்தையும் சிங்கள இனவாதத்தையும் கர்ணகடூரமாக எதிர்த்தும் வெளிவரும் பத்திரிகை எதுவுமேயில்லையென எமது தோழர்கள், நணபர்கள், வாசகர்கள் எம்மிடம் தொடர்ச்சியாக தெரிவித்தும் வருகிறார்கள். இவ்வாறு கடந்த மூன்று ஆண்டுகளாக நேரடியாகவும் மின்னஞ்சல் வாயிலாகவும் வானவில்லை உற்சாகமூட்டியும் விமர்சித்தும் கருத்துக்களை தெரிவிக்கும் சகலருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம்.

புலிகள் இராணுவரீதியாக தோற்கடிக்கப்பட்டாலும், புலிகளென்ற பாசிச அமைப்பு உருவாகுவதற்கு வழிசமைத்த குறுந்தேசிய அரசியல் சிந்தாந்தம் இலங்கை அரச எதிர்ப்பு, சிங்கள இனமீதான பகையுணர்வு என்பன தோற்கடிக்கப்படவில்லை என்பதை அண்மைக்கால நிலவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக கடந்த ஆண்டில் நடந்து முடிந்த வடமாகாணசபை தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு அடைந்த வெற்றி இதனை மேலும் நிரூபணமாக்கியுள்ளது.

புலிகளின் இராணுவப்பிரிவிலோ அல்லது அரசியல் பிரிவிலோ உள்வாங்க இலாயக்கற்றவர்களாக இருந்த அதேவேளையில், புலிகளின் கொலை பயமுறுத்தல்களுக்கு அடிபணிந்து பிரமுகர்களாக, உதிரிகளாக இருந்தவர்களை உள்ளடக்கியே புலிகள் தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கியிருந்தார்கள். இந்த பயந்தாங்கொள்ளிகளை தேர்தல்களில் போட்டியிடவும் புலிகள் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் 2009 ஆண்டு ஜனவரி மாதம் முதலாந்திகதி இலங்கை இராணுவத்தினரால் புலிகளிடமிருந்து பரந்தன் கைப்பற்றப்பட்ட பின்னர், புலிகள் மனிதக்கேடயமாக பிடித்து வைத்திருக்கும் இலட்சக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினர் கொல்லப்படுவதோடு, புலிகளும் முற்றுமுழுதாக அழிக்கப்படலாமென என்பதை ஓரளவுக்கேனும் உணர்ந்திருந்தும், இந்த அனர்த்தத்தினை தடுத்து நிறுத்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு பெரியளவில் பிரயத்தனங்கள் எதுவும் எடுக்கவில்லை. எனினும் 2009 ஆண்டு மே மாதம் புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பின்னர், புலிகள் ஆயுதம் மூலம் அடைய நினைத்ததை தேர்தல் வெற்றிகளினூடாக அடையப்போவதாக பொய்ப்பிரச்சாரம் செய்து தேர்தல்களில் பெரும் வெற்றியும் ஈட்டியுள்ளார்கள்.

புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்குமான யுத்தத்தில் அநியாயாமாக உயிரிழந்த பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு நீதி வேண்டும் என்று கோரி அந்நிய சக்திகளை இலங்கைக்கு வா... வா... என்று கூவி தமிழ் தேசியக்கூட்டமைப்பு அழைக்கின்றது. இந்த அழைப்பு தற்போதைய இலங்கை அரசை கவிழ்க்க திடசங்கற்பம் பூண்டு நிற்கும் அந்நிய சக்திகளுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மூள்வதற்கு அடிப்படைக் காரணமாக இருந்த இனப்பிரச்சனைக்கு தீர்வு காணாமல் பாரிய தவறினை இழைத்துவரும் இந்த அரசின் மீது எமக்கு கடுமையான விமர்சனங்கள் இருப்பினும், இனப்பிரச்சனையை சாட்டி இலங்கையில் காலடி வைக்க நினைக்கும் அந்நிய சக்திகளை துரத்தியடிக்க வேண்டுமென்பதிலும் நாம் எப்போதும் உறுதியாக இருக்கின்றோம். *

## வானவில்

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். sunvaanavil@gmail.com

## நன்றி

‘வானவில்’ 2013இல் தனது மூன்றாவது ஆண்டுப் பயணத்தைத் தொடர்ந்த போது, நேரடியாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொண்ட நூற்றுக்கணக்கான தனி வாசகர்கள், பொது அமைப்புக்கள், ஊடகங்கள், அரசியல் கட்சிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் தங்கள் நல்லாதரவைத் தொடரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
– ஆசிரியர் குழு


படிப்பகம்

www.padippakam.com

# தென் சூடான் உள்நாட்டு யுத்தத்திலிருந்து இலங்கைத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்!

**சுப்பராயன்**




**ஆ**பிரிக்க நாடான சூடானில் 20 வருட கால உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட இலட்சக்கணக்கானவர்களின் உயிரிழப்பு, இடப்பெயர்வு, பட்டினிச்சாவு, ஆட்கொல்லி நோய்கள், சொத்தழிவு என்பனவற்றின் பின்னர், பொதுசனக் கருத்துக் கணிப்பின் ஊடாக 2011இல் 'தென் சூடான்' என்ற புதிய நாடு உலக வரைபடத்தில் தோற்றம் பெற்றது.

இந்தப் புதிய நாட்டின் உதயத்தின் பின்னணியில் வழமைபோலவே ஐ.நாவும், மேற்கு நாடுகளும் செயற்பட்டன. தேன்கூட்டைக் கண்டு நரி வாயூறுவது போல, தென் சூடானில் உள்ள அபரிமிதமான எண்ணெய் வளத்தை எண்ணி மேற்குலகின் பகாசுர எண்ணெய் கொம்பனிகள் ஆவலாதிப்பட்டதில் வியப்பதற்கு எதுவுமில்லை. அதுவே அந்த நாட்டின் தோற்றத்திற்கு கால்கோள் இட்டது என்றால், அது மிகையானதுமல்ல.

தென் சூடானின் தோற்றம் உலகின் மூலை முடுக்கெல்லாம் ஓடி ஒடிச் சுரண்டும் பல்தேசியக் கொம்பனிகளுக்கு கொண்டாட்டமாக அமைந்தது என்றால், எப்பொழுதும் ஏகாதிபத்திய அடிவருடிகளாக இருந்து வரும் நமது 'தமிழீழ' தேசியவாதிகள் சிலரையும் கற்பனையில் மிதக்க வைத்தது. தென் சூடான் போல வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் புலிகளின் கனவான "தமிழ் ஈழமும் ஒருநாள் நனவாகும்" என, புலிகளின் மிச்சசொச்சங்களும் அவர்களது வழித்தடத்தைத் தொடரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் சூளுரைத்தும் கொண்டனர்.

போதாததற்கு அமெரிக்காவிலிருந்து செயற்படும் வி.உருத்திரகுமாரனின் "நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை" தென் சூடான் அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாகவும், தமது அரசாங்கம் தென் சூடானில் தூதரகம் ஒன்றைத் திறந்துள்ளதாகவும், உருத்திரகுமாரன் தரப்பினர் ஊடகங்களில் பெரும் பிரச்சாரங்களையும் மேற்கொண்டனர். (ஆனால் தென் சூடான் அரசாங்கம், "நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்" எந்தப் பகுதியில் பதிலுக்கு தனது தூதரகத்தைத் திறந்திருக்கிறது என்று தெரியவில்லை! சில வேளைகளில் இரகசியமாக வைத்திருக்கிறார்களோ என்னவோ?)

1971இல் இந்தியா தலையிட்டு பாகிஸ்தானில் இருந்து கிழக்குப் பாகிஸ்தானைப் பிரித்து "பங்களாதேஸ்" என்ற நாட்டை உருவாக்கியபோதுதான், தமிழரசுக் கட்சியினர் "தமிழீழம்" என்ற கோசத்தை முதன்முதலாக முன்வைத்தனர் (அதற்கு முதல் ஆங்கிலத்தில் தமது கட்சியின் பெயரை Federal Party – அதாவது சமஸ்டி கட்சி என்றும், தமிழ் பொதுசனத்தை ஏமாற்றி வாக்குப் பெறுவதற்காக தமிழில் தமிழரசுக்கட்சி என்றும் ஏமாற்று நாடகம் ஆடி வந்தனர்) அதாவது இந்தியா பாகிஸ்தானில் செய்தது போல, இலங்கையிலும் தமிழர்களுக்கு ஒரு தனிநாட்டை உருவாக்கித்தரும் என தமிழ் மக்களை நம்ப வைத்து, மக்களை ஏமாற்றி அவர்களது வாக்குகளைக் கொள்ளையடித்துப் நாடாளுமன்றம் சென்றனர். ஆனால் கடைசியில் இந்தியா செய்ததெல்லாம் தமிழீழம் கேட்டு ஆயுதம் தாங்கிப் போராடிய புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவியதுதான்!

பின்னர் கிழக்கு திமோர் இந்தோனேசிய ஆக்கிரமிப்பிலிருந்து ஐ.நாவின் மேற்பார்வையில் விடுதலையானபோது, அதேபோல இலங்கையிலும் ஐ.நா தலையிட்டு தமிழர்களுக்குத் தனிநாடு ஒன்றைப் பெற்றுத் தரும் எனப் பிரச்சாரம் செய்தனர். அதுவும் நடக்கவில்லை. இப்பொழுது தென் சூடான் உருவாக்கப்பட்டதும், அதை முன்வைத்து இன்னொரு புருடா!

ஆனால் இவர்களது ஆதர்சநாடான தென் சூடான் உருவான இரண்டொரு வருடங்களுக்குள்ளாகவே உள்நாட்டு யுத்தத்தால் சிதைந்து போய் கிடக்கிறது. தற்செயலாக புலிகளின் தலைமையில் "தமிழீழம்" என்றொரு நாடு உருவாகியிருந்தாலும் தென் சூடானுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்பட்டிருக்கும் என்றபடியால், இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டின் வரலாற்றைக் கற்றுக்கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

ஜுபா நகரைத் தலைநகராகக் கொண்டு அமைந்த புதிய தென்சூடானின் முதலாவது ஜனாதிபதியாக சல்வா கீர்ர் (Salva Kirr) அவர்களும், உதவி ஜனாதிபதியாக டொக்டர் றீக் மச்சார் (Reik Machar) அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஆரம்ப நாட்களில் புதிய நாடு வெளிப்பார்வைக்கு அமைதிப்பூங்காவாகத்தான் காட்சி அளித்தது. ஆனால் இரண்டொரு வருடங்களிலேயே இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றி, அது பின்னர் மோதலாக உருவெடுத்தது. உதவி ஜனாதிபதி மச்சார் தனக்கு எதிராகச் சதி செய்து ஆட்சியைக் கைப்பற்ற முனைவதாகக் குற்றம்சாட்டி அவரைப் பதவியிலிருந்து நீக்கினார் ஜனாதிபதி கிர்ர்.

அதைத் தொடர்ந்து ஜனாதிபதி தலைமையிலான அரச படைகளுக்கும், பதவி நீக்கப்பட்ட உதவி ஜனாதிபதி தலைமையிலான கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பமாயின. தற்பொழுது நாட்டின் மொத்தமுள்ள 10 மாகாணங்களில் 5இல் இந்த மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக 11 நாட்களில் மட்டும் ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்ததுடன், சுமார் ஐம்பதினாயிரம் பேர் வரையிலான மக்கள் ஐ.நாவினால் நடாத்தப்படும் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். ஐ.நாவின் அமைதி காக்கும் படையினர் 12,500 பேர் பணியிலிருந்தும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் திண்டாடுகின்றனர்.

ஏற்கெனவே சூடான் ஒரே நாடாக இருந்த போது நடைபெற்ற 20 வருட உள்நாட்டு யுத்தத்தில் 2 மில்லியன் (20 இலட்சம் - இலங்கையின் 30 வருட உள்நாட்டு யுத்தத்தில் படையினர், புலிகள், பொதுமக்கள் என சுமார் ஒரு இலட்சம் மக்கள் இறந்ததிற்கு துள்ளிக் குதிக்கும் மேற்கு நாடுகளும், மனித உரிமை அமைப்புகளும் இதுபற்றி வாய் திறப்பதில்லை) செத்து மடிந்துள்ளனர். அதன் காரணமாகத்தான் 2005இல் ஐ.நாவினதும், அமெரிக்காவினதும் ஏற்பாட்டில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டு, மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் 2011இல் தென் சூடான் என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.

புதிய நாடு உருவாக்கப்பட்டாலும், எப்பொழுதும் மோதல் களமாக இருந்து வந்த டார்பூர் (Darfur) பகுதியிலும், எல்லைப் பகுதிகளான அபேஜி (Abyei), புளூ நைல் (Blue Nile), சவுத் கோர்டோபா∴ன் (South Kordofan) ஆகிய பகுதிகளிலும் சூடானிய அரச படைகளுக்கும், தென் சூடான் படைகளுக்கும் இடையில் மோதல்கள் தொடர்கின்றன. இந்த நிலைமையில் புதிதாகப் பிறந்த தென் சூடான் நாட்டில் புதிதாக உள்நாட்டு யுத்தம் மூண்டுள்ளமையானது, அதன் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

வெளிப்பார்வைக்கு தென் சூடான் ஜனாதிபதிக்கும், அவரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட உதவி ஜனாதிபதிக்கும் இடையிலான மோதல் வெறுமனே அதிகாரப் போட்டி காரணமாக ஏற்பட்டது போலத் தோன்றினாலும், அவர்கள் இருவரும் பிரதிநிதித்துவம் செய்யும் வெவ்வேறான இனங்களுக்கிடையிலான முரண்பாடும் இப்பிரச்சினையில் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கின்றது.

ஜனாதிபதி கிர்ர் டின்கா (Dinka) என்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் ஏறத்தாழ 3 மில்லியன் மக்கள் அவரது இனத்தைச் சேர்ந்தவர்கள். முன்னாள் உதவி ஜனாதிபதி மச்சார், நுயெர் (Nuer) என்ற இனத்தைச் சேர்ந்தவர். அவரது இனத்தைச் சேர்ந்தவர்கள் 2 மில்லியன் தொகை ஆவர். மொத்தமுள்ள 10 மாகாணங்களில் 7இல் டின்கா இனத்தவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இந்த இரண்டு இனங்களுக்குமிடையிலான முரண்பாடே, ஜனாதிபதிக்கும் முன்னாள் துஜைனாதிபதிக்கும் இடையில் மோதல் ஏற்படக் காலாய் அமைந்தது.

இந்த இருவருக்குமிடையிலான மோதல் ஒருபுறமிருக்க, பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் தலைவிரித்தாடும் அதிகாரத் துஸ்பிரயோகம், ஊழல், பொதுச் சொத்துகளைச் சூறையாடுதல், ஆயுதப் படையினரின் அத்துமீறல்கள், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சுகாதார வசதியின்மை போன்ற பிரச்சினைகள் இந்தக் குழந்தைத் தேசத்தையும் விட்டு வைக்கவில்லை. நிலைமை இப்படியே போனால் இந்த நாடு 'செத்துப் பிறந்த குழந்தை' போல ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



பல ஆபிரிக்க நாடுகள் யுத்தத்தை நிறுத்தி இரு சாராரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கு முயன்ற போதிலும், இரு தரப்பினரும் பரஸ்பரம் விதிக்கும் நிபந்தனைகளால் அது கைகூடவில்லை. தென் சூடானின் தோற்றத்திற்கு பெரும் பங்காற்றிய அமெரிக்கா, அங்கு எழுந்துள்ள நிலைமைகள் குறித்து பெரிதும் மனக்கிலேசம் அடைந்துள்ளது.

தென் சூடான் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுசான் றைஸ் (Susan Rice) "இரு தரப்பும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வராவிட்டால், அமெரிக்க வழங்கி வரும் பாரம்பரிய ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டி வரும்" என எச்சரித்துள்ளார்.

தென் சூடானில் எழுந்துள்ள நிலைமையை இலங்கையில் புலிகளின் செயற்பாடுகளுடன் இணைத்துப் பார்த்தால் சில

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்

www.padippakam.com

யாழ்ப்பாணத் தபால்:

# என்று தணியும் இந்த அடிமை மோகம்?

கடந்த ஆண்டு நொவெம்பரில் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமறூன் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இப்போதெல்லாம் (போர் முடிந்த பின்னர்) குடாநாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இங்குள்ளவர்களைச் சந்திப்பதில் ஒரு சடங்கு முறையைக் கடைப்பிடிக்கிறார்கள். அதாவது இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற பெயரில் உள்ள சிலர், யாழ்ப்பாண ஆயர் (யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மை சைவ மக்களின் பிரதிநிதியான நல்லை ஆதினத்தையோ அல்லது வேறு சைவப் பெருமக்களையோ அவர்கள் சந்திப்பதில்லை), இன்னமும் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கும் சில மக்கள் என, அவர்கள் சந்திப்பதற்கானவர்களின் ஒரு பட்டியல் ஏற்கெனவே தயார் நிலையில் இருக்கும்.

இப்பொழுது வட மாகாணசபை அமைந்து விட்டதால், மாகாண முதலமைச்சரும், சில மாகாணசபை உறுப்பினர்களும் (குறிப்பாக புலிகளின் திரிகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல் பொறுப்பாளர் எழிலனின் மனைவி அனந்தி) ஆகியோரும் அவர்கள் சந்திப்பவர்களின் பட்டியலில் இப்பொழுது புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படியாக இவர்கள் சந்திப்பவர்கள் எல்லோரும் இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் (பெரும்பாலும் மேற்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள்) எதை எதிர்பார்க்கிறார்களோ, அதற்கேற்ப, அதாவது அரசுக்கெதிராக குற்றப்பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள்.

அவ்வாறு சமர்ப்பிப்பதையே முழுத் தமிழ் மக்களினதும் ஏகோபித்த கருத்தாகக் கொண்டு, ஏதாவது ஒரு குற்றப் பத்திரிகையைத் தயாரித்துக்கொண்டு, இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஜெனிவாவுக்கோ அல்லது நியூயோர்க்கிற்கோ பறப்பார்கள்.

ஜனநாயகத்தை உரக்கப் பேசும் இவர்கள், ஒரு விடயம் சம்பந்தமாக மக்கள் மத்தியில் பலவிதமான கருத்துக்கள் இருக்கும் என்பதை வசதிக்கேற்ப மறந்து விடுவார்கள். அப்படியில்லாதுவிட்டால், அவர்கள் வழமையாகச் சந்திக்கும் அரச எதிர்பாளர்களுடன், மற்றவர்களையும் சந்திக்கவல்லவா வேண்டும்? அதாவது யாழ்ப்பாண மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளைப்



பெற்றவரும், வடக்கின் சார்பாக அரசாங்கத்தில் அமைச்சராக அங்கம் வகிப்பவருமான டக்ளஸ் தேவானந்தா, சிரேஸ்ட தமிழ் அரசியல் தலைவரான வீ.ஆனந்தசங்கரி, சுயாதீனமான புத்திஜீவிகள், உண்மையான சிவில் சமூகப் பிரதிநிதிகள் போன்றோரையும் சந்திக்க வேண்டும்.

அத்துடன் வடபகுதி மக்களில் பெரும்பான்மையினரான சைவ மக்களின் பிரதிநிதிகள், புலிகளால் வடக்கிலிருந்து இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் இஸ்லாமிய மதத் தலைவர்கள் போன்றோரையும் சந்திக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. மாறாக மன்னாருக்கு ஓடிச்சென்று இன்னொரு ஆயரான ராயப்பு யோசப்பைச் சந்திப்பார்கள். அவர் எவ்வாறான கருத்தைக் கொண்டவர் என்பது சிறுகுழந்தைக்கும் தெரியும்.

அப்படியான ஒரு சந்திப்பைத்தான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரித்தானியப் பிரதமர் கமரூனும் மேற்கொண்டார். அத்துடன் அங்கு வைத்து அரசாங்கத்தின் மீது காரசாரமான கண்டனங்களையும் பொழிந்தார். இந்தக் காட்சியைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்றுதான் தெரியவில்லை.

ஏனெனில் இலங்கையைத் தனது பிடிக்குள் ஏறத்தாழ 250 ஆண்டுகள் வைத்திருந்த பிரித்தானியா, இலங்கை மக்களை அடக்கியொடுக்கி அரசாட்சி புரிந்ததுடன், இலங்கையின் வளப்பமிகு வளங்களையும் சூறையாடிச் சென்ற நாடு. அதுமாத்திரமின்றி கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையைத் தீப்பற்றி எரிய வைத்த இனப்பிரச்சினையைத் திட்டமிட்டு உருவாக்கிவிட்டுச் சென்றவர்களும் இந்தப் பிரித்தானிய காலனித்துவவாதிகளே. அதற்காக அவர்கள் ஒப்புக்குத்தன்னும் இலங்கை மக்களிடம் இன்றுவரை மன்னிப்புக் கேட்கவில்லை

நிலைமை அவ்வாறிருக்க, இந்த பல்லுப் பிடுங்கப்பட்ட, கிழண்டிப்போன பிரித்தானிய ஏகாதிபத்தியமும், அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளும், மீண்டுமொருமுறை தமிழர்களைப்


படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்தி இலங்கையில் இன மோதல்களை உருவாக்கும் நாசகார வேலையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதுமட்டுமல்லாது, தமது நாடுகளில் குடியேறியுள்ள புலம்பெயர் தமிழர்களின் வாக்குகளைக் குறி வைத்தும், இலங்கைக்கு எதிரான அவர்களது குறுகிய அரசியல் விளையாட்டு நடைபெறுகின்றது. அவர்களது திட்டங்களுக்கு தரகர்களாக முன்னைய தமிழ் தலைமைகளைப் போலவே இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் வெட்கங்கெட்ட முறையில் துணை போகின்றது. எல்லா ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் இனங்களும் அந்நிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்து தமது விடுதலையை சென்றெடுத்துள்ள சூழ்நிலையில், இலங்கைத் தமிழினத்தின் கேடுகெட்ட தலைமை மட்டும்தான், அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு நிலபாவாடை அழைப்பு விடுக்கும் உலகிலுள்ள ஒரேயொரு தலைமையாக இருக்கின்றது. பிரித்தானியப் பிரதமரின் யாழ்ப்பாண வருகையின் போதும் தமிழ் கூட்டமைப்புத் தலைவர்கள் அதைத்தான் செய்தார்கள்.

தமிழ் தலைமைகளின் வரலாறே தேசத்துரோகமும் ஏகாதிபத்திய விசுவாசமும்தான் என்பது காலம்காலமாக இருந்து வரும் உண்மை. இல்லாவிட்டால் இந்தியாவின் தேசபிதா கதர் காந்தி "வெள்ளையனே வெளியேறு!" என சுதந்திர முழக்கம் எழுப்ப, இலங்கையின் 'கால்சட்டைக் காந்தி' எஸ்.ஜே.வி.செல்வநாயகம், பண்டாரநாயக்க அரசாங்கம் 1956இல் திருகோணமலையிலும், கட்டுநாயக்காவிலும் இருந்த பிரித்தானிய இராணுவத்தளங்களை அகற்றிய போது, "வெள்ளையனே வெளியேறாதே!" என, பிரித்தானிய அரசி எலிசபெத் மகாராணிக்கு தந்தி அனுப்புவாரா?

அதைத்தான் செல்வநாயகத்தின் இன்றைய வாரிசுகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் செய்கின்றனர். அரசியலில் மட்டுமின்றி கலாச்சாரத்திலும் வெள்ளையர்களையே இந்த 'சுத்த சுயம்புவான' தமிழ் தலைவர்கள் பின்பற்றுகின்றனர். யாழ்ப்பாண நூலகத்தில் வைத்து பிரித்தானிய பிரதமரைச் சந்தித்த கூட்டமைப்பு தலைவரான சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் பூரணமடான கோட் சூட்டில் வெள்ளையர்கள் போல் தோற்றமளித்தனர். அத்துடன் முன்னைய காலங்களில் மன்னர்கள் உப்பரிகையில் நின்று மக்களுக்குக் காட்சியளிப்பது போல, நூலக மேல்மாடியில் அந்தக் கோலத்தில் பிரித்தானியப் பிரதமருடன் நின்று ஊடகங்களுக்கு 'போஸூம்' கொடுத்தனர்.

இவ்வளவிற்கும் இயற்கையாகவே கோட் சூட் அணிய வேண்டிய பிரித்தானியப் பிரதமர், யாழ்ப்பாணத்தில் பொதுமக்களைச் சந்தித்த வேளையில் சாதாரணமாக காற்சட்டையுடனும், மேற்சட்டையுடனும் சென்றார். ஆனால் நமது தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ் பண்பாடு என்பனவற்றின் 'பாதுகாவலர்கள்' மட்டும் வேஸ்டி, சட்டை, சால்வை அணிவதை தரக்குறைவாக எண்ணி, கோட் சூட்டில் வலம் வந்தனர்.

ஆனால் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் ராஜபக்சவோ, எவ்வளவு அதிகாரங்கள், வசதிகள் இருந்தும், உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும், தூய்மையான வெள்ளை வேஸ்டி, வெள்ளை மேல்சட்டை, தனது குடும்ப பாரம்பரியமான குரக்கன் நிறச்சால்வை என்பனவற்றை அணிந்து செல்கிறார். அவரது கலாச்சாரம் எங்கே?, நம்மவர்களது கலாச்சாரம் எங்கே? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

தமிழினம் விடுதலை பெறுவதற்கு முதலாவதாகச் செய்ய வேண்டியது, தமது தலைமையை அந்நிய அரசியல் அடிமைத்தனத்திலிருந்தும், கலாச்சாரத்திலிருந்தும் விடுவிக்க வேண்டும்.

அதுவரையும் "என்று தணியும் இந்த அடிமை மோகம்" என்று ஆற்றாமையுடன் பாடுவதைத்தவிர வேறு வழியில்லை

***- யாழவன்***

4ம் பக்கத்தொடர்ச்சி...

பொருத்தப்பாடுகளைக் காண முடியும். புலிகளுக்கு முன்பிருந்த தமிழ் தேசியவாதிகளும் சரி (தமிழரசுக்கட்சி போன்ற), புலிகளும் சரி, தமிழர்களும் முஸ்லீம்களும் சகோதரர்கள் என்று சொல்லிக்கொண்டு, இரு இனத்தவர்களினதும் தாயகப் பூமியான வடக்கு கிழக்கில் 'தமிழீழ அரசு' அமைக்க வேண்டும் எனச் சொல்லி வந்தார்கள்.

அவர்கள் கூறி வந்தது போல அதற்கான சந்தர்ப்பம் சூழ்நிலை ஏற்பட்டு தனிநாடு ஒன்று வடக்கு கிழக்கில் உருவாகியிருந்தால், தென் சூடானின் இரு இனங்களுக்கிடையிலும் ஏற்பட்டது போன்ற ஒரு நிலையைத்தான் புலிகள் முஸ்லீம் மக்களுக்கு எதிராக உருவாக்கி இருப்பார்கள். ஆனால் புலிகளின் கெட்ட காலமோ என்னவோ, அவர்கள் தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு முன்னரே முஸ்லீம் மக்களைப் படுகொலை செய்தும், அவர்களை வடக்கிலிருந்து துரத்தியடித்து இனச் சுத்திகரிப்புச் செய்தும் தமது பாசிச சுயரூபத்தைக் காட்டிவிட்டார்கள்.

இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பிரிவனையும், தனிநாடும்தான் தீர்வு எனக் கருதும் தமிழ் மக்களோ அல்லது தமிழ் தேசியவாதிகளோ, தென் சூடான் என்ற புதிய நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான பாதையில் நாட்டின் அனைத்து இனங்களையும் சேர்ந்த முற்போக்கு சக்திகளுடன் கரம் கோர்த்துப் போராடுவதே ஒரே வழி.
*


படிப்பகம்

www.padippakam.com

# சம்பந்தனின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்திய வாசுதேவ நாணயக்கார!

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பற்றி வட பகுதி மக்களுக்கு ஆரம்பத்தில் இருந்து வந்த நம்பிக்கை நான்கு மாதங்களில் படிப்படியாக கரைய ஆரம்பித்துள்ளது. அதற்கு பல காரணங்கள் இருந்தபோதிலும், அவர் இப்பொழுதெல்லாம் முன்னுக்குப் பின் முரணாக ஒவ்வொரு நாளைக்கு ஒரு கதை சொல்லி வருவதும் ஒரு காரணம்.

தமிழ் மக்களுக்கு இதுவரை காலமும் கிடைக்காத ஒரு தலைமை விக்னேஸ்வரன் மூலம் கிடைத்திருப்பதாகவே தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். அந்த நம்பிக்கையை அவரே தனது நடத்தைகள் மூலம் இப்பொழுது தகர்த்து வருகின்றார்.

விக்னேஸ்வரனுக்கு எதிராக முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட மாவை சேனாதிராசா விரும்பிய போதிலும், சம்பந்தன் – சுமந்திரன் கூட்டு அதற்கு இடம் கொடுக்காததிற்கு சில காரணிகள் இருந்தது. அந்தக் காரணிகளால் சம்பந்தன் மீதும் மக்களுக்குச் சற்று நம்பிக்கை ஏற்பட்டிருந்ததும் உண்மையே. அந்தக் காரணங்கள் இரண்டு வகைப்பட்டவை.

ஒன்று, மாவை சேனாதிராசா – சிறீதரன் கூட்டு தீவிர புலி விசுவாசிகள். அவர்களை மாகாணசபை நிர்வாகத்திற்கு அனுமதித்தால், புலிகளின் அழிவுக்குப் பின்னர் தம்மை புலிகளுடன் தொடர்பில்லாத மிதவாதிகளாகக் காட்ட முற்பட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பாதகமான நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதாகும்.

இரண்டாவது காரணி, மாவை கோஸ்டியை மாகாணசபை நிர்வாகத்தில் அனுமதித்தால், அவர்கள் அதனைப் பயன்படுத்தி தமது செல்வாக்கை வளர்த்து, என்றென்றைக்குமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தமது கைக்குள் போட்டு விடுவார்கள் என்பதாகும்.

அதனால்தான், மாகாணசபைத் தேர்தலின் போது விக்னேஸ்வரனுக்கு குழி பறிக்கும் வேலையை மாவை கோஸ்டி செய்கிறது என்று தெரிந்து, சம்பந்தன் யாழ்ப்பாணத்திலேயே முகாமிட்டு நின்று விக்னேஸ்வரனின் வெற்றிக்காகப் பாடுபட்டார்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராகத் தெரிவான பின்னர், இப்பொழுது சம்பந்தன் – சுமந்திரன் – விக்னேஸ்வரன் என்ற மும்மூர்த்திகள்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முகமாகக் காட்டப்படுகிறார்கள். அரசுத் தலைமையுடனான பேச்சுவார்த்தைகளின் போதாகட்டும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளின் போதாகட்டும், இந்த மூவருமே கலந்து கொள்கின்றனர். மாவை சேனாதிராசாவோ அல்லது சுரேஸ் பிரேமச்சந்திரனோ



**வாசுதேவ நாணயக்காரா**

அந்த நிகழ்வுகளில் சேர்க்கப்படாது ஓரம்கட்டப்பட்டு வருகின்றனர்.

விக்னேஸ்வரன் முதலமைச்சர் ஆக ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்ததும், சத்திய பிரமாண விடயத்தில் எதிர்ப்புத் தெரிவித்துக் கிளர்ச்சி செய்த மாகாணசபை உறுப்பினர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த விடயத்திலும் சரி, சம்பந்தனுக்கும் நிறையப் பங்கு உண்டு. சம்பந்தனினதும், விக்னேஸ்வரனினதும் இந்த நடவடிக்கைகள் மூலம், வட மாகாணசபை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து வட பகுதி மக்களுக்கு சேவையாற்றும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் துளிர்விட்டது. முதலமைச்சர் விக்னேஸ்வரனின் சில பேச்சுகளும் அந்த நம்பிக்கையை ஊட்டின.

ஆனால் சில காலத்தின் பின்னர், முதலமைச்சரின் பேச்சுகளும், நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று முரணாக அமையத் தொடங்கின. மாகாணசபை சுமூகமாக இயங்குவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துவிட்டு, அவர் தேவையில்லாத விடயங்களில் – அரசுடன் மோதலை உருவாக்கும் விதத்தில் – செயப்படத் தொடங்கினார். முதலமைச்சரின் இந்தப் பல்டியடிப்பு பலருக்கு ஆச்சரியத்தையும், முதலமைச்சர் மீது அவநம்பிக்கையையும் ஏற்படுத்தத் தொடங்கியது.

ஏனெனில், கடந்த 60 வருடங்களாக தமிழ் தலைமைகள் பின்பற்றி வந்த 'எதிர்ப்பு அரசியல்' என்ற வங்குரோத்து அரசியலால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காதது மட்டுமின்றி, இருந்ததையும் இழந்ததுதான் கண்ட மிச்சம். அவர்கள் பிச்சைக்காரனின் புண்ணைப்போல, தமிழ் மக்களின் பிரச்சினையைக் காட்டி தமது சொந்த அரசியல் மற்றும் சுயநலன்களைப் பேணிக்கொண்டார்களே தவிர, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஆக்கபூர்வாக எதையும் செய்யவில்லை. அவர்களது எதிர்ப்பு அரசியல் காரணமாக, அவர்களால் குறைந்த பட்சம் ஒரு உள்ளூராட்சி சபையைக்கூட திறம்பட நிர்வகிக்க முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், எந்தவொரு அரசியல் கட்சியையும் சாராத, நீதிபதியாகப் பதவி வகித்த ஒருவர் (விக்னேஸ்வரன்) முதலமைச்சர் வேட்பாளராகக் களம் இறங்கிய போது, மக்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து அவரை ஆதரித்து அமோக வெற்றிபெற வைத்தனர். அவர் பழைய தமிழ் தலைமைகள் மேற்கொண்ட அழிவு


படிப்பகம்

www.padippakam.com

அரசியலை விடுத்து, ஆக்கபூர்வமான வழியில் செயற்படுவார் என மக்கள் நம்பினர். அவரும் ஆரம்பத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது போல நடந்து கொண்டார். ஆனால் இப்பொழுது தனது பாதையை மாற்றிக்கொண்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் வழமையான அழிவுப் பாதையிலேயே அவரும் பயணிக்க ஆரம்பித்துள்ளார்.

அதற்கான காரணமென்ன என்பது பற்றி மக்கள் மத்தியில் பல்வேறு குழப்ப சிந்தனைகள் உருவாகி இருந்தன. ஆனால் அவற்றுக்கெல்லாம் விடை பகருவது போல, அண்மையில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அரசாங்கத்தின் சிரேஸ்ட அமைச்சர்களில் ஒருவரும், முதலமைச்சர் விக்னேஸ்வரனின் திருமண சம்பந்தியுமான வாசுதேவ நாணயக்கார ஒரு விடயத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

அதாவது, முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து வட மாகாணசபையைத் திறம்படவும், மக்களுக்குப் பயனள்ள விதத்திலும் நடாத்த விரும்புவதாகவும், ஆனால் அவரை செயற்பட விடாது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தடுத்து வருவதாகவும் வாசுதேவ நாணயக்கார சம்பந்தன் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர், ஒரு பொறுப்பு வாய்ந்த முதலமைச்சர் குறித்து பகிரங்கமாக இப்படியொரு கருத்தை எழுந்தமானத்துக்குத் தெரிவித்திருக்க முடியாது. அதுவும் முதலமைச்சரின் சம்பந்தியான அவர், தனது சம்பந்தியான முதலமைச்சரை இக்கட்டான சூழலில் மாட்டிவிடும் வகையில் பொறுப்பற்ற முறையில் இந்தக் கருத்தைக் கூறியிருக்கவும் முடியாது. அதுமாத்திரமின்றி, இன்றுவரை வாசுவின் இந்தக் குற்றச்சாட்டை முதலமைச்சர் விக்னேஸ்வரன் மறுக்கவும் இல்லை.

வாசுதேவ நாணயக்காரவின் இந்தக் கூற்று, தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனின் இரட்டை வேடத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ளது. ஏனெனில், சம்பந்தன் எப்பொழுதும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு எடுத்த எடுப்பிலேயே அரசாங்கத்தைக் குற்றம்சாட்டுவது வழக்கம். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு பல்வேறு சக்திகள், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி, பங்கு வகித்திருப்பதை அவர் ஒருபோதும் சொன்னது கிடையாது. தாங்கள் ஒரு தவறும் செய்யாத நல்ல பிள்ளைகள் போன்றும், அரசாங்கம்தான் எல்லாத் தவறுகளுக்குமான முழுக் குற்றவாளி போன்றும் அவரது உரைகள் இருக்கும்.

ஆனால் இப்பொழுது தெரிகிறது அவரது உண்மையான சுயரூபம். அவர்கள் மக்களுக்குப் பொய்களைச் சொல்லி மாகாணசபையைக் கைப்பற்றியது, அந்த வட மாகாணசபையை உள்ளிருந்தே குழிபறித்து இயங்காமல் செய்துவிட்டு, அதற்கான பழியை அரசாங்கத்தின் தலையில் போடுவதற்கே என்பது தெளிவாகிவிட்டது. அதனால்தான், ஆரம்பத்தில் ஆக்கபூர்வமாகக் கதைத்த முதலமைச்சர் விக்னேஸ்வரனும் இப்பொழுது முரண்பாடாகச் செயற்பட ஆரம்பித்துள்ளார். சம்பந்தன் போன்றவர்களின் இந்த வகையான செயற்பாடுகளுக்குக் காரணம், அவர்களது 60 வருட அரசியல் கபடத்தனம்தான் காரணம் என்பது ஒருபுறமிருக்க, தற்போது சர்தேச அரங்கில் இலங்கைக்கு எதிராக புலிசார்பு தமிழ் சக்திகளும், ஏகாதிபத்தியவாத சக்திகளும் செயற்படுத்தி வரும் வேலைத்திட்டங்களும் ஒரு காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை.

பொதுவாகவே பிற்போக்குவாதத்தையும், இனவாதத்தையும் சேர்த்து அரசியல் செய்து வரும் தமிழ் தலைமைகள், தமிழ் மக்களின் நன்மைக்காகத் தமது சொந்த அரசியல் இருப்பைத் தியாகம் செய்வார்கள் என எதிர்பார்ப்பது முட்டாள்தனம். எனவே தற்போதைய தமிழ் தலைமைத்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சம்பந்தனும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. அதனால்தான் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் தம்பிமுத்து, “அரசுடன் ஒத்துழைத்துச் செயற்பட சம்பந்தனுக்கு விருப்பம், ஆனால் தன்னைத் ‘தமிழ் துரோகி’ என முத்திரை குத்திவிடுவார்கள் என அவர் பயப்படுகிறார்” எனக் குறிப்பிட்டார் போலும்!

எது எப்படியிருப்பினும் மீண்டுமொருமுறை தமிழ் மக்கள் (வடக்கு மக்கள் மூலம்) தமிழ் தேசியக் கூட்டமைப்பால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. இந்த உண்மையை ‘வெறும் மாடுகளான’ நாம் சொல்லவில்லை. ‘மணிகட்டின மாடான’ முதலமைச்சர் விக்னேஸ்வரனின் சம்பந்தியான வாசுதேவ நாணயக்காரவே சொல்லியிருக்கிறார்!

இப்பொழுதாவது மதிப்புக்குரிய ஸ்ரீமான் தமிழ் பொதுஜனத்திற்கு ஏதாவது ஞானம் பிறக்கிறதா அல்லது சூடு சொரணை வருகிறதா என்று சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம். *

## தமிழில் ‘த ஹிந்து’

திராவிட இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஈ.வே.ரா பெரியாரினால் “மவுண்ட்ரோட் மஹா விஸ்ணு” என வர்ணிக்கப்பட்ட ‘த ஹிந்து’ என்ற 130 வருடப் பழமை வாய்ந்த இந்தியாவின் புகழ்மிக்க ஆங்கிலப் பத்திரிகையின் குழுமத்திலிருந்து தமிழிலும் ‘த ஹிந்து’ நாளிதழ் வெளிவர ஆரம்பித்துள்ளது.

வழமையாக தமிழகத்தில் வெளிவரும் தமிழ் ஏடுகள் அனைத்திலும் (துக்ளக் விதிவிலக்கு) திராவிட வாடை வீசும் சூழலில், தமிழ் ஹிந்துவின் வருகை தமிழ் வாசகர்களுக்கு ஒரு சிறிய ஆசுவாசத்தை ஏற்படுத்தியுள்ளது. ஹிந்துவும் ஒரு முதலாளித்துவப் பத்திரிகை என்ற போதிலும், தமிழ் தேசியவாதம் என்ற புற்றுநோயிலிருந்து அது சற்று விடுபட்டிருப்பதே அதற்குக் காரணம்.

தமிழ் ‘த ஹிந்து’வை இணையத்திலும் இலவசமாக வாசிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# முருங்கை – உணவாகவும் மருந்தாகவும்

"முருங்கை" என்றதுமே, "ஆஹா, அது எனக்கு மிகவும் விருப்பமான உணவு" என உங்களில் பலர் குறிப்பிடுவீர்கள். அந்தளவுக்கு அது தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்த ஒரு தாவர உணவு. ஆனால் அது உணவு மட்டுமல்ல, மருந்தும்கூட என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆங்கிலத்தில் "Drumstick" (மேளத்தடி) என அழைக்கப்படும் முருங்கையின் மேன்மை இப்பொழுது மேற்கத்தைய நாடுகளிலும் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளது.

அதிகமாக இது இலங்கை, இந்திய நாடுகளில் உணவாகப் பயன்படுத்தப்பட்டாலும், பல ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் மக்களும் முருங்கையை உணவாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த மரத்தின் காய்கள் மட்டுமின்றி, இலை, பூ, வேர், பட்டை என எல்லாமே பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக தமிழர்கள் இதன் காயை உறைப்புக் கறியாகவும், பால் கறியாகவும், வேறு சில மரக்கறிகள், மீன் – கருவாடு என்பனவற்றுடன் கலந்தும் சமைத்து உண்பர். சாம்பார் வைத்தால் அதில் கட்டாயமாக முருங்கைக்காய் இருக்கும். இரும்புச் சத்து நிறைந்த இலையை எண்ணெயில் வறுத்து உண்பர். அத்துடன் கஞ்சி, ஒடியல் கூழ் என்பனவற்றில் போட்டு காய்ச்சியும் உண்பர். இதன் வேரும் பட்டையும் பிசினும் சில மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் தமிழர் பகுதிகள் சிலவற்றில் பன்றி இறைச்சி சமைக்கும் போது, அதில் முருங்கைப் பட்டையையும் சேர்ப்பது வழமை.

மிகவும் வரட்சியான பகுதிகளிலும் தண்ணீர் பாய்ச்சாமலே செழித்து வளரக்கூடிய ஒரு மரம் முருங்கை. முன்னைய காலங்களில் ஏழை எளிய மக்களுக்கு செலவில்லாமல் கிடைத்த ஒரு உணவாக இது திகழ்ந்திருக்கிறது.

இதன் மருத்துவக் குணம் தமிழர்கள் நன்கறிந்த ஒன்று. பெண்கள் குழந்தை பிரசவித்தால், அவர்களுக்கு 31 நாட்கள்



முடியும்வரை கொடுக்கும் 'பத்தியக்கறி'யில் முதன்மை வகிப்பது முருங்கைக்காய். அதுபோலவே, யாராவது காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உள்ளானால், அவர்களுக்குச் சோற்றுடன் கொடுக்கும் 'சரக்குத்தண்ணி'யிலும் முருங்கைக்காய முக்கிய இடத்தை வகிக்கும்.

இப்பொழுது ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளிலும் முருங்கை மக்களிடையே பிரபல்யம் அடையத் தொடங்கியுள்ளது. இது பற்றி அங்கு பல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, அதில் உள்ள மருத்துவ தன்மைகள் மற்றும் செழிப்பான போசாக்கு என்பன குறித்துப் பல கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

முருங்கை இலையில் கீரை, பால், வாழைப்பழம், கரட், தயிர் என்பனவற்றில் இருக்கும் இரும்புச்சத்து, கல்சியம், பொற்றாசியம், விற்றமின் ஏ, புரதம் என்பன பெருமளவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தோல் வியாதிகள், சுவாசம் சம்பந்தமான நோய்கள், ஜீரணக் கோளாறுகள் உட்பட பல நோய்களுக்கு முருங்கை நிவாரணமளிக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பொழுது ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் உள்ள சில நிறுவனங்கள் முருங்கை இலையை மாவாக அரைத்து Moringa Powder என்ற பெயரில் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளன. இதற்கு மக்களிடையே ஆதரவு பெருகி வருகிறது.

முருங்கை பெரும்பாலும் தடிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் முன்னைய காலங்களில் முற்றிய முருங்கைக்காய்கள் வெடிக்கும்போது அதில் இருந்து வீழும் விதைகளிலிருந்து கன்றுகள் முளைத்து வளருவதும் உண்டு.

இலங்கையிலும் தமிழகத்திலும் சில குறிப்பிட்ட காலங்களிலேயே முருங்கை காய்ப்பது வழமை. மாரி மழைக் காலங்களில் முருங்கை காய்ப்பது அபூர்வம். ஆனால் இப்பொழுது வட அமெரிக்க நாடுகளில் வருடம் முழுவதும் முருங்கைக்காயைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அவை பெரும்பாலும் பலவிதமான மாறுபட்ட கால நிலைகள் உள்ள கரீபியன் மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலிருந்து வருடம் முழுவதும் வருகின்றன. அதுமட்டுமின்றி தமிழர்கள் அதிகம் பயன்படுத்தும் கறிவேப்பிலை, வல்லாரை, பொன்னாங்கண்ணி, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், மரக்கறிகள், கடலுணவுகள் என்பனவும் அந்த நாடுகளிலிருந்து வருடம் முழுவதும் வந்துகொண்டே இருக்கின்றன.

ஆனால் சிலருக்கு வேறு ஒருவகையான அச்சமும் முருங்கை குறித்து ஏற்பட்டுள்ளது. முருங்கைக்கு மேற்கு நாடுகளில் கிராக்கி ஏற்பட்டு வருவதால், தென்னாசியர்களின் பெருமைமிக்க மரங்களில் ஒன்றான வேம்புக்கு அமெரிக்கர்கள் தன்னிச்சையாகக் காப்புரிமை கோரியது போல, முருங்கைக்கும் நடந்துவிடுமோ என்பதுதான் அந்த அச்சம்.

**– மருதையினார்**

"கட்சியானது, அமைப்புகளின் ஒரு கூட்டுத்தொகையாக இருக்க வேண்டும். (கணிதப்படி எண்ணிக்கையைக் கூட்டிக்கிடைக்கும் வெறும் எண்ணிக்கையின் தொகையல்ல; அமைப்புகளின் சகல விதமான அம்சங்களையும் ஒன்றாகக் கூட்டும்படியான கூட்டுக்கலப்புத் தொகை) இவ்விதம் நான் கூறும்போது என்னுடைய விருப்பத்தை, என்னுடைய கோரிக்கையை மிகவும் சரியாகவும் வெளியிடுகின்றேன். வர்க்கத்தின் முன்னணிப்படை என்ற முறையில், எவ்வளவு தூரம் அமைப்புரீதியாக ஒன்று திரட்டி உருவாக்க முடியுமோ, அவ்வளவு தூரம் கட்சியை உருவாக்க வேண்டும்; ஒரு குறைந்தபட்ச அமைப்புக் கோட்பாடுகளுக்குத் தங்களை எத்தகைய நபர்கள் உட்படுத்திக் கொள்வார்களோ, அத்தகைய நபர்களை கட்சிக்குள் உறுப்பினர்களாக அனுமதிக்க வேண்டும்."

**– லெனின்**



படிப்பகம்

www.padippakam.com

# வட மாகாண முதலமைச்சரின் பயணமும் அதே படகில்தானா?

கனடாவில் 'கனடிய தமிழ் கொங்கிரஸ்' (Canadian Tamil Congress) என்ற ஒரு அமைப்பு செயல்பட்டு வருகின்றது. அது தான் ஒரு நடுநிலைமையான அமைப்பு, தான்தான் கனடிய தமிழ் மக்களின் பிரதிநிதி என்றெல்லாம் சொல்லிக்கொண்டாலும், அதன் அரசியல் சார்பு நிலை என்ன என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இலங்கை அரச எதிர்ப்பு ஒன்றுதான் அதன் அடிப்படை. அதன் காரணமாக அது தீவிர தமிழ் இனவாதிகளின் பிரிதிநிதி மட்டும்தான், அதாவது கனடியத் தமிழர்களில் ஒரு பகுதியினரின் பிரிதிநிதி என்பது மட்டுமே உண்மை.

அந்த அமைப்பு வருடாவருடம் தைப்பொங்கல் கொண்டாட்டம் என்ற பெயரில் வசதி படைத்தவர்களைக் கொண்டு ஒரு வைபவத்தை நடாத்துவது வழமை. இந்த வருடமும் அது நடைபெற்றுள்ளது. அதையொட்டி 'வொய்ஸ்' (Voice) என்ற பெயரில் மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய தமிழ் பிரமுகர்கள் யார் என்று பார்த்தாலே, கனடிய் தமிழ் கொங்கிரசின் அரசியல் சார்பைப் புரிந்து கொள்ளலாம்.



அவ்வாறு வாழ்த்து வழங்கியவர்கள் படடியலில் இலங்கையிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலண்டனிலிருந்து வண.இமானுவேல் பாதிரியார், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரும் உள்ளடங்கி இருக்கின்றனர்.

இவர்களில் சம்பந்தனும், இமானுவேல் பாதிரியாரும் என்ன சொல்வார்கள் என்பது நாமெல்லோரும் ஏற்கெனவே அறிந்த சங்கதி. ஆனால் அரசியலுக்குப் புதியவரும், முன்னாள் நீதியரசரருமான வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்ன சொல்லியிருக்கிறார் என்பது முக்கியமானது. அவர் தன் வாழ்த்துரையில் ஓர் இடத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"We are conscious that our Tamil speaking Nation includes our brethren from east as well as our Muslim brothers and sisters. May this year cement a relationship of brotherhood among all sections of the Tamil speaking people oblivious of Party, Caste, Creed and religious differences."

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இந்தக் குரல் - அதாவது 'தமிழ் பேசும் மக்கள், முஸ்லீம் சகோதரர்கள்' - இத்தியாதி எல்லாம் முன்னைய தமிழ் தலைமைகளின் அதே குரலே. முன்பு எப்படி பொய்களைச் சுமந்து திரிந்து மக்களைத் தமிழ் தலைமைகள் ஏமாற்றினரோ, அதே பாணியில்தான் விக்னேஸ்வரனின் குரலும் அமைந்துள்ளது.

இன்று தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை பற்றிப் பேசும் இவர்கள், ஏறாவூரிலும், காத்தான்குடியிலும் புலிப் பாசிசவாதிகள் பள்ளிவாசல்களில் தொழுதுகொண்டிருந்த முஸ்லீம் மக்களைச் சுட்டுப்படுகொலை செய்த போதும், முஸ்லீம் மக்களின் விவசாய நிலங்களைப் பறித்து அவர்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியபோதும், வடக்கில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை இரண்டு மணித்தியால அவகாசதத்தில் உடுத்த துணியுடன் விரட்டி இனச்சுத்திகரிப்பு செய்தபோதும் எங்கே போய் இருந்தாகள்?

அதுமட்டுமல்லாமல், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களைப் புலிகள் தடை தடை செய்தபோது, அவற்றில் இருந்த கிழக்கு மாகாண இளைஞர்களைக் குறி வைத்துத் தேடித்தேடி அழித்த போது, இந்த விக்னேஸ்வரன்களோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரோ எங்கே பதுங்கிக் கிடந்தனர்?

**தவம் (கனடா)**

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காலத்தில் முஸ்லீம் மக்களையும், மலையகத் தமிழ் மக்களையும், வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களுடன் சேர்த்து 35 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் சாாபாகப் பேசிய தமிழ் தேசியவாதம், கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாக, 12 இலட்சம் வடக்கு கிழக்கு தமிழர்கள் பற்றி மட்டும் பேசுகின்ற நிலைமைக்கு இட்டுச் சென்றது, முஸ்லீம் மக்களா அல்லது மலையகத் தமிழ் மக்களா அல்லது யாழ்ப்பாண மையவாத அரசியலா? முழுப் பூசணிக்காயை ஒருபிடி சோற்றுக்குள் மறைக்கும் விக்னேஸ்வரனின் இந்த விதமான கருத்துகள் இனிமேலும் பெரும்பான்மையான தமிழ்மக்களிடம் எடுபடாது என்பதை அந்த மெத்தப்படித்த முன்னாள் நீதியரசர் விளங்கிக் கொள்வது அவசியம்.

அத்துடன் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் இப்படியும் சொல்லியிருக்கிறார்:


படிப்பகம்

"In this respect the Diaspora has a role to play. Apart from the financial and infra structural benefits which no doubt we do expect from all of you, we would want you to adequately educate our people on the dangers of disunity."



அவருடைய இந்தக் கூற்று புலம்பெயர் தமிழ் சமூகம் என அழைக்கப்படுகின்ற, புலிப் பாசிச மாபியாக் கும்பல்களால் ஆட்டுவிக்கப்படுகிற மக்கள் கூட்டம் பற்றி அவர் கொண்டிருக்கிற தப்பான அபிப்பிராயத்தை அல்லது தெரிந்துகொண்டே தாயகத்தில் வாழும் மக்களுக்கு தவறான அபிப்பிராயத்தைக் கொடுக்கிற கூற்றாகும்.

ஏனெனில், கடந்த காலங்களில் இலங்கையில் புலிகளால் செய்யப்பட்ட சகல நாசகார அழிவுச் செயல்களுக்கும் தார்மீக ஆதரவு மட்டுமின்றி, பண உதவி செய்தவர்கள் இந்தப் புலம்பெயர் தமிழ் சமூகம்தான். தாம் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் பாதுகாப்பாகவும், வசதி வாய்ப்புடனும் வாழ்வதற்கான ஒரே சுயநல நோக்கத்துடன்தான், அவர்கள் புலிகளின் இந்த அழிவு வேலைகளுக்கு உதவினார்கள். தமது பிள்ளைகளை மிகவும் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, தாயகத்தில் வாழ்ந்த ஏழைப் பிள்ளைகளை பலவந்தமாகப் புலிகள் பிடித்துச் சென்று யுத்தமுனையில் அவர்களைப் பலிக்கடா ஆக்குவதற்கு தூண்டுகோலாக இருந்தவர்கள் இந்த புலம்பெயர் தமிழ் சமூகம்தான் என்பது முதலமைச்சர் அறியாத விடயமல்ல. போர் முடிவுற்ற பின்னர், இலங்கையில் நடைபெற்ற இறுதியுத்த சம்பவங்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த தருஸ்மன் ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில், புலிகள் செய்த குற்றங்கள் குறித்துக் குறிப்பிடுகையில், புலிகள் செய்த மானிட விரோதச் செயல்களுக்கு புலம்பெயர் தமிழ் சமூகம் செய்த பங்களிப்புப் பற்றியும் குறிப்பிட்டிருந்ததை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிந்திருக்கவில்லையா?

அதுமட்டுமின்றி, போர் முடிவடைந்து நான்கு வருடங்களுக்கு மேலாகியும் தாயக மக்களின் புனர்வாழ்வுக்காக இந்தப் புலம்பெயர் சமூகம் ஒரு சதத்தைத்தன்னும் வழங்கியதும் கிடையாது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும். அப்படியிருக்க, இந்த அழிவுகரமான சமூகம் எப்படி இப்பொழுது மட்டும் தாயகத்தில் வாழும் பிள்ளைகளின் கல்வி அறிவூட்டலுக்கு உதவும்? விக்னேஸ்வரன் முதலமைச்சர் ஆனதும் இவர்கள் எல்லோரும் மனம் திருந்தி அகிம்சாவாதிகளாகவும், பரோபகாரிகளாகவும் மாறிவிட்டார்கள் என்று அவா கருதுகிறாரா?

அதுமாத்திரமல்லாமல், இந்தப் புலம்பெயர் சமூகம் தான் வாழுகின்ற நாடுகளில் யாழ். மையவாத சிந்தனையுடனேயே இன்னமும் வாழ்கிறார்கள். இலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுடனோ அல்லது சிறுபான்மை இனங்களான முஸ்லீம் மற்றும் மலையகத் தமிழ் மக்களுடனோ இவர்கள் உறவாடுவதில்லை. அதுமட்டுமல்லாமல், கிழக்கிலங்கை தமிழ் மக்களுடனும் ஒட்டுறவு ஏதும் இல்லை. போதாதிற்கு யாழ்ப்பாணத்தில் கட்டிக்காத்த கொடிய சாதியமைப்பை இங்கும் வலு இறுக்கமாகப் பேணுகிறார்கள். ஊருக்கொரு சங்கமும், ஆளுக்கொரு கோயிலும் அமைத்துப் பெருமைப்படுகிறார்கள். அதாவது இலங்கையின் வடக்கில் எப்படி ஒரு இறுக்கமான பிற்போக்கு சமூகமாக வாழந்தார்களோ, அதேபோல அங்குள்ளது போல நாலு பக்கமும் வேலி அடைத்துக்கொண்டு வாழுகிறார்கள்.

அதுஒருபுறமிருக்க, வந்த இடத்திலாவது இங்குள்ள பிறநாட்டு மக்களுடன் உறவுகளைப் பேணுகிறார்களா என்றால் அதுவுமில்லை. வெள்ளை இன மக்களைப் பார்த்து 'வெள்ளைகள்' என்றும், கறுப்பின மக்களைப் பார்த்து 'கறுவல்கள்' என்றும், சீன இனத்தவர்களை 'சப்பட்டைகள்' என்றும், அரபு மற்றும் இஸ்லாமிய மக்களைப் பார்த்து 'சோனிகள்' என்றும்தான் தமக்குள் பேசும்போது அழைக்கிறார்கள். ஹிட்லரின் காலத்தில் ஜெர்மானியர்கள் எப்படித் தாம்தான் உலகின் தூய்மையான இனம் என இறுமாப்புக் கொண்டார்களோ, அதேபோல இவர்களும், குறிப்பாக யாழ்ப்பாண மேட்டுக்குழாம் தமிழர்கள் புலம்பெயர் நாடுகளுக்கு ஓடிவந்து அகதி வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, மற்றெல்லோரையும் விட தாம்தான் உலகத்திலேயே பரிசுத்தமான இனம் என்ற இறுமாப்பில்தான் இருப்பதைக் காண முடிகிறது.

இப்படியானவர்களைப் பார்த்து தாயக மறுமலர்ச்சிக்கு உதவுமாறு முதலமைச்சர் விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுவதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. நாலாம் கட்ட ஈழப்போரைக் கனவு காண்பவர்கள், முதலாம்,

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com

# இறுதிக்கட்டப் போரின் போது நடைபெற்ற சில சம்பவங்கள் குறித்து அமைச்சர் டியூ குணசேகர வெளியிட்டுள்ள அதிர்ச்சித் தகவல்கள்!

**எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் கூடவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில், அமெரிக்கா இலங்கைக்கு எதிராக மூன்றாவது தீர்மானம் ஒன்றையும் கொண்டுவரவுள்ளது. அமெரிக்காவின் அந்த முயற்சிக்கு பிரித்தானியா உட்பட சில மேற்கு நாடுகள் தீவிர ஆதரவளித்து வருகின்றன. இந்த மேற்கு நாடுகளில் சில கடந்த காலங்களில் உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதை உலக மக்கள் நன்கறிவர். அத்துடன் இன்றும்கூட பல நாடுகளில் இலங்கையைவிட மோசமான மனித உரிமை மீறல்கள் நடைபெற்றும் வருவதைக் காணலாம்.**

**அப்படியிருக்க, அவற்றையெல்லாம் விடுத்து, பயங்கரவாதத்திற்கு எதிரான 30 வருடப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, யுத்த பீதியிலிருந்து நாட்டு மக்களை விடுவித்து, தன்னைச் சுதாகரித்துக்கொண்டு எழுந்து நிற்க முற்படும் சின்னஞ்சிறிய இலங்கைத்தீவு மீது, "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த" கதையாக சில நாடுகள் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வரும் துர்ப்பாக்கிய நிலைமை தொடர்கின்றது.**

**இதற்கான காரணங்களை விளக்குவது போல, அண்மையில் காலியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரும், இலங்கை அரசாங்கத்தின் சிரேஸ்ட்ட அமைச்சர்களில் ஒருவருமான டியூ குணசேகர** (D.E.W. Gunasekara) **சில அதிர்ச்சித் தகவல்களைத் தெரிவித்திருக்கிறார். அவற்றை எமது 'வானவில்' வாசகர்களுக்காகக் கீழே தந்துள்ளோம்.**

"இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற போது அமெரிக்க ஜனாதிபதி, ஐ.நா.செயலாளர் நாயகம், கனேடியப் பிரதமர், பிரித்தானியப் பிரதமர் ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தனர். அவ்வாறான நிலையிலும் ஜனாதிபதி எதற்கும் அஞ்சாமல் தீர்மானம் எடுத்துப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். அன்று ஜனாதிபதி தனது உறுதியான நிலைப்பாட்டிலிருந்து தளர்ந்திருப்பாரானால், அமெரிக்கர்கள் பிரபாகரனை மீட்டுக்கொண்டு சென்றிருப்பர்.

எமக்குச் சர்வதேசரீதியில் சவால்கள் இருக்கின்றன. 2009ஆம் ஆண்டு மேமாதம் இறுதி வாரம் 18ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 19ஆம் திகதி அனைவரும் வெளியில் கொண்டுவரப்பட்டனர்.

இதன்போது நான் அறிந்த சில விடயங்களைக் கூறவேண்டும். ஏனெனில் அந்தச் சந்தர்ப்பங்களில் இவற்றைக் கூறவில்லை. தற்போது அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கூறவேண்டும். வரலாற்றில் இவை அறிக்கைப்படுத்தப்பட வேண்டும்.



டியூ குணசேகரா

அப்போது இருந்த நிலைமை என்ன? அந்த இறுதி 5 தினங்களில் என்ன நடந்தது என்று எனக்கு நன்றாகத் தெரியும். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எமது ஜனாதிபதியுடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தார். இல்லையேல் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவோம் என்றார்.

ஐ.நா.பொதுச்செயலாளர் போரை நிறுத்துமாறு தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு கூறினார். கனேடியப் பிரதமர், பிரித்தானியப் பிரதமர் ஆகியோரும் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு கூறினர்.

எனக்கு ஞாபகம் இருக்கிறது. மே 13ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை அமைச்சரவை கூடிப் பேச்சு நடத்தியது. அன்று காலை ஜனாதிபதி ஜோர்தான் நாட்டுக்குச் சென்றிருந்தார். "நான் வரும்வரை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் இதைத் தொடருங்கள். எவருக்கும் அடிபணிய இடமளிக்க வேண்டாம்" என்று கூறினார்.

இதுதான் எமது நாட்டின் தீர்க்கமான தருணம். அந்தச் சமயத்தில் ஜனாதிபதி உறுதியாகத் தீர்மானம் எடுத்தார் என நான் நினைக்கிறேன். அன்று ஜனாதிபதி தமது உறுதியிலிருந்து தளர்ந்திருந்தால், அமெரிக்கர்கள் வந்து பிரபாகரனை மீட்டுக்கொண்டு சென்றிருப்பர். அவ்வாறான நிலை ஏற்பட இடமளிக்கப்படவில்லை. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அன்று போரை முடிவுக்குக் கொண்டு வந்ததே இன்று சர்வதேச நாடுகள் எம்மை ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்வதற்குப் பிரதானமான காரணமாக உள்ளது. அதைவிடுத்து தமிழ் மக்கள் மீது உள்ள அக்கறையால் அல்ல".

**இவ்வாறு அமைச்சர் டியூ குணசேகர தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.** *

---

11ம் பக்கத்தொடர்ச்சி...

இரண்டாம், மூன்றாம் கட்ட ஈழப்போர்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்ற உதவுவார்கள் என யாராவது கற்பனை பண்ணினால், அது அவர்களது தவறே ஒழிய நமது புலம்பெயர் 'தமிழ் செல்வங்களின்' தவறு அல்ல. *



படிப்பகம்

www.padippakam.com



நாலந்தா பல்கலைக்கழகத்தின் எஞ்சியுள்ள பகுதி

# பழம் பெரும் நாலந்தா பல்கலைக்கழகத்தின் மகிமை!

புத்தகாயாவுக்கும் ராஜகிருகத்துக்கும் இடையே சற்று விலகி நாலந்தா இருக்கிறது. கி.பி 7ஆம் நூற்றாண்டில் இந்தியா வந்த யுவான் சுவாங் கருத்துப்படி இங்கே நாலந்தா என்கிற 'நாகர்' வாழ்ந்து வந்ததால் இந்தப் பெயர் ஏற்பட்டது. நாகர் குலத்தாரோடு புத்தருக்கு நல்லுறவு இருந்ததற்கு பாலி இக்கியங்களில் ஆங்காங்கே சான்றுகள் உண்டு.

புத்தரின் பிரதம சீடர்களில் ஒருவரான சாரிபுத்திரர் இடம் இதுவே. இவருக்கு சைத்யம் ஒன்று இருந்ததாகவும், அதற்கு அசோகர் காணிக்கைகள் தந்ததாகவும் கூறப்படுகிறது. மகாயானத் தத்துவவாதி நாகார்ஜுனர் (கி.பி. 2ஆம் ஆண்டு) இங்கே தனது கல்வியைத் தொடங்கியதாகவும், பிறகு இதற்குத் தலைவரானதாகவும் தாரநாதர் என்பவர் குறிப்பிடுகிறார். புகழ்பெற்ற வேறு சில பவுத்த ஞானிகளாகிய ஆரிய தேவர், அசங்கா, வசுபந்து ஆகியோருக்கும் நாலந்தாவோடு தொடர்பு இருந்தது எனப்படுகிறது.

எனினும் இங்கே செய்யப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சியின்படி நாலந்தா ஒரு கல்வி நிலையமாக குப்தர் காலத்தில்தான் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) புகழ் பெற்றிருக்க வேண்டும். உண்மையில் இங்கு 'பத்தாயிரத்திற்கும் மேலானவர்கள் பயின்று வந்தார்கள்' என்கிறார்கள் சோவியத் வரலாற்றாய்வாளர்கள் தங்களது 'இந்திய வரலாறு' என்ற நூலில். அவர்களது கூற்று உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்பதை இங்கே சென்று நேரில் பார்த்தால்தான் உணர முடியும்.

1500 ஆண்டுகளுக்கு முன்பு சீரும் சிறப்புமாகச் செயல்பட்ட அந்தப் பல்கலைக்கழகத்தின் மிச்சசொச்சங்களே விரிந்து பரந்து கிடக்கின்றன. கிட்டத்தட்ட நிலை மட்டத்திற்குப் பல செங்கல் கட்டடங்கள் கம்பீரமாக நிற்கின்றன. எப்படி இந்தச் செங்கற்கள் இவ்வளவு காலமாக நிற்கின்றன என்று விசாரித்ததில் அந்தப் பகுதி மண்ணின் வாகு அப்படி என்கிறார்கள்...

பிரதான கோவில் பகுதி, வேறு சில கோவில் பகுதிகள், பத்துக்கு மேற்பட்ட துறவி மடங்கள் - என்று தனித்தனியாக உள்ளன. அவை பற்றிய விபரங்களை ஆங்காங்கே எழுதி வைத்திருக்கிறார்கள். துறவிகளுக்கான படுக்கைகளைக்கூடத் தெளிவாக அடையாளம் காண முடிகிறது. இவைதான் சமயலறைகள், படிக்கட்டுகள் என்று சட்டென்று உணரும்படியாக அவற்றின் அமைப்புகள் இப்போதும் துல்லியமாகத் தெரிகின்றன.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே பலருக்கும் கல்வி வழங்குவதில் அக்கறை காட்டியிருக்கிறது பவுத்தம். தன் வீழ்ச்சிக்குப் பிறகு மீண்டும் வீறுகொண்டு எழுந்த வேத மதமோ உயர் வருணத்தாருக்கு மட்டுமே கல்வி என்று அதை மிகவும் சுருக்கிவிட்டது. நாலந்தா போன்ற பெரும் பல்கலைக்கழகங்களுக்கு வேலையில்லாமல் போனது. திண்ணைப் பள்ளிக்கூடங்களே நடப்புகளாயின. மீண்டும் கல்லூரிகள் - பல்கலைக்கழகங்கள் என்பவற்றை ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளே கொண்டுவர வேண்டியிருந்த விநோத அவல நிலை ஏற்பட்டது...

புத்தர் காலத்து பாலி மொழி வெகு மக்களின் மொழியாகும். சமஸ்கிருதமோ அன்றும் பண்டிதர்களின் மொழியாகவே இருந்தது. இரண்டும் ஒரு பொது மொழியின் இரு வடிவங்கள் போலும். பாலியில் "பிக்கு" என்றால், சமஸ்கிருதத்தில் "பிட்சு" என்கிறார்கள். "தம்மம்" என்றால், "தருமம்" என்கிறார்கள். "நிப்பாணம்" என்றால், "நிர்வாணம்" என்கிறார்கள். இப்படியே நிறையச் சொற்கள்.

புத்தர் எனும் சந்திரனை மறைக்கும் கருமேகங்களை விலக்கி அவரின் மெய்யான முகத்தையும் மேதாவிலாசத்தையும் தரிசிக்க இந்த நூல் உதவுமேயானால் படைப்பின் நோக்கம் நிறைவேறியதாக நினைப்பேன்.

(மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள பகுதி, அருணன் எழுதிய, "புத்தர் - தர்மமும் சங்கமும்" என்ற நூலின் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்டது. அவருக்கு எமது நன்றி) *


படிப்பகம்

www.padippakam.com

# ஆஸ்கார் விருது சினிமாவுக்கான அளவுகோல் அல்ல!

## –நடிகர் நாசர் கூறுகிறார்!!

“ஈரான் நாட்டு சினிமாக்கள் வெற்றி பெறுகிறது என்றால், அதற்கு அவர்களது நாட்டில் நிலவும் சூழ்நிலைதான் காரணம். இந்தியாவில் வர்த்தகத்தை மையமாக வைத்து சினிமா எடுக்கின்றனர். ஈரானில் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கின்றனர். இதனால்தான் ஈரானிய சினிமாவில் இருந்து இந்திய சினிமா வேறுபடுகின்றது.

ஐரோப்பிய வெகுஜன சினிமாக்களின் தரம் அதிகம். டைட்டானிக் போன்ற படங்களின் தரம் மிகவும் அதிகம். ஆனால் தமிழகத்தில் எடுக்கப்படும் வெகுஜன சினிமாக்களின் தரம் குறைவு. வர்த்தக சினிமாவால் நல்ல படத்தைத் தர முடியாது. தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி போன்ற பிறமொழிச் சினிமாக்களில் நடிக்கும் முன்பு அந்த மொழிகளில் உள்ள நாவல்களைப் படிப்பேன். அப்போதுதான் அந்த மக்களின் கலாச்சாரம், பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப நடிக்க முடியும்.

ஆஸ்கார் விருதுக்கும் இந்திய சினிமாக்களுக்கும் தொடர்பு இல்லை. அமெரிக்க சினிமாக்களுக்காக வழங்கப்படும் விருது அது. ஹாலிவுட் படங்களைவிடச் சிறந்தவை ஐரோப்பியப் படங்கள். ஆஸ்கார் விருது சினிமாவுக்கான அளவுகோல் அல்ல.

அமெரிக்க கல்லூரிகளில் எந்தப் படிப்பைப் படித்தாலும், சினிமா பற்றிய பாடம் உண்டு. அதேபோல, இந்தியாவில் அனைத்துக் கல்லூரிகளிலும் சினிமாவை ஒரு பாடமாக வைக்க வேண்டும்’.

*-இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழக சினிமா நடிகரான நாசர் ஒரு பேட்டியில்.*

# ரேடியத்தின் கண்டுபிடிப்பு உரிமையை சொந்தமாக்காத மேரிகியூரி அம்மையாரின் மேன்மை!

ரேடியத்தைக் கண்டுபிடித்த மேரிகியூரி அம்மையாரிடம் அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர், ‘‘உங்களுக்கு வேண்டியதைக் கேட்கச் சொன்னால் என்ன கேட்பீர்கள்?’’ என்று கேட்டார். அதற்கு மேரிகியூரி, ‘‘எனது ஆராய்ச்சியைத் தொடர ஒரு கிராம் ரேடியம் தேவைப்படுகிறது, ஆனால் அது ஒரு லட்சம் டாலர் விலை என்பதால் என்னால் வாங்க முடியவில்லை’’ என்றார் ஏக்கத்துடன்.

அந்தப் பத்திரிகை ஆசிரியை அமெரிக்கா சென்று ஒரு குழு அமைத்து, பொதுமக்களிடம் நிதி திரட்டினார். அந்தப் பணத்தில் ஒரு கிராம் ரேடியம் வாங்கி, அமெரிக்க ஜனாதிபதி கையால் மேரிகியூரிக்கு அளிக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த நிகழ்ச்சியில் ரேடியத்தை வழங்கும் பத்திரத்தைப் படித்துப் பார்த்த மேரிகியூரி, தனது பெயருக்கு எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். அதைத் தனது ஆராய்ச்சி நிறுவனப் பெயருக்கு மாற்றி எழுதச் சொன்னார் மேரிகியூரி. அந்த ரேடியம் தனக்குப் பின் தன் சந்ததியினரின் உடமை ஆகிவிடக்கூடாது என்பதில் மேரி கவனமாக இருந்தார். அந்தக் கவனம்தான் பொதுநலம்.

**நன்றி: ஹெச்.பாஸா (ஆனந்தவிகடன்)**

முன்பக்கத்தொடர்ச்சி…

இழந்து நிர்க்கதியானவர்கள் இருதரப்பிலும் இருந்த அப்பாவிப் பொதுமக்களே.

இவ்வாறு இலங்கையில் இனவாதம் ஒரு இலாபகரமான அரசியல் ஆயுதமாகவும், யுத்தம் அதன் உச்சகட்ட அறுவடையாகவும் இருந்த அரை நூற்றாண்டு காலத்தில் இலங்கையின் முன்னைய காலனித்துவ ஆட்சியாளனான பிரித்தானியாவோ அல்லது அதனுடன் சேர்ந்து இன்று இலங்கைக்கு எதிராக சண்டப் பிரசண்டம் செய்யும் ஏனைய மேற்கு நாடுகளோ, அதுபற்றி ஒருபோதும் அக்கறை செலுத்தியதே கிடையாது. இப்பொழுது மட்டும் இலங்கை அரசுக்கெதிராகவும், தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் இவர்கள் அமர்க்களம் பண்ணுவதன் மர்மம் என்ன?

பொதுநலவாய மாநாட்டுக்கு வந்த வேளையில் யாழ்ப்பாணம் வரை சென்று தமிழ் மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், தமது நாடு 200 வருடங்களுக்கு மேலாக இலங்கை மக்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகளுக்காகவும், இலங்கையின் வளங்களை வகைதொகை இல்லாமல் கொள்ளையடித்துச் சென்றது குறித்தும் இலங்கை மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் இதுபற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்துக் கண்ணீர் வடிக்கும் அவர், தனது நாடு செய்த குற்றத்தை ஏற்றுக் கொள்ளாதது, அவரது கபட நோக்கத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

அதுமாத்திரமின்றி, தமது நாடு கடந்த பல நூற்றாண்டுகளாகளாக உலக நாடுகள் பலவற்றில் காலனியாதிக்கத்தை மேற்கொண்டு செய்த பல்வேறு விதமான கொடுமைகள் பற்றியோ, இரண்டு உலக யுத்தங்களின் போதும், பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட தனித்தனி யுத்தங்களின் போதும், மனித குலத்துக்கு எதிராக மேற்கொண்ட பேரழிவுகள் பற்றியோ எதுவும் பேசாது, இலங்கையில் உலகிலேயே பயங்கரமான புலிகள் இயக்கம் மேற்கொண்ட மனிதகுலத்திற்கு எதிரான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் போது ஏற்பட்ட சில உரிமை மீறல்களை மட்டும் தூக்கிப் பிடித்து, சர்வதேசரீதியான போர்க்குற்ற விசாரணை இலங்கை மீது நடாத்தப்பட வேண்டும் என்று கோருவது, பெரிய திருடன் சிறிய திருடனைத் துரத்தும் கதையே அன்றி வேறல்ல.

இன்றும்கூட இவர்கள் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், லிபியாவிலும், சிரியாவிலும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அல்லது முன்பு கொரியாவிலும், இந்தோ சீனத்திலும் என்ன செய்தார்கள்? அந்த நாடுகளில் இவர்களால் பல இலட்சம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டது மனித உரிமை மீறல் இல்லையா?

இலங்கை என்ற சின்னஞ்சிறு நாடு, சர்வதேச – பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் பணம், ஆயுதம், அரசியல் என்ற


படிப்பகம்

www.padippakam.com

பின்பலங்களுடன் செயற்பட்ட புலிகள் என்ற கொடிய பாசிஸ இயக்கத்தின் செயற்பாடுகளை 2009இல் முடிவுக்குக் கொண்டு வந்தபோது, இந்த வல்லாதிக்க சக்திகள் என்ன செய்திருக்க வேண்டும்? பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் சின்னாபின்னமாகிப்போன இலங்கை மீண்டும் எழுந்து நிற்பதற்கு உதவி செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதற்கு எதிரான வழியிலேயே செயற்படுகின்றனர்.

இந்த ஏகாதிபத்தியவாதிகள் முதலில் திட்டமிட்டு இலங்கையில் இனப்பிரச்சினையை உருவாக்கிவிட்டுச் சென்றார்கள். அதை வைத்துக்கொண்டு தமிழ் – சிங்கள இனவாத சக்திகள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக மக்களின் உயிருடன் விளையாடி வந்துள்ளனர். முதலில் அரசியல் விளையாட்டாக இருந்த இனப்பூசலை, இந்த உலக – பிராந்திய வல்லாதிக்க சக்திகள், பின்னர் அதை இனவாத யுத்தமாக மாற்றினர். ஒருபக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச அரசுகளுக்கு தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறை யுத்தத்தை நடாத்துவதற்கு சகலவிதமான ஆதரவுகளையும் வழங்கிக்கொண்டு, மறுபக்கத்தில் அதை எதிர்த்துப் போராடும்படி தமிழ் இனவாத சக்திகளுக்கும் ஆதரவு வழங்கினர். அதாவது 'பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டினர்'.

ஆனால் இன்றைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், பேச்சுவார்த்தை என்ற போர்வையின் கீழ் போரைத் தொடர்ந்து நடாத்த வைத்த ஏகாதிபத்தியவாதிகளின் யுக்திக்கு முடிவு கட்டப்பட்டது. ஆரம்பத்தில் சமாதான முயற்சிகளுக்கு இந்த அரசாங்கம் புலிகளுக்கு நேசக்கரம் நீட்டிய போதும், அவர்கள் திமிர்த்தனத்துடன் அந்தக் கரங்களில் காறித்துப்பிய போது, அவர்களது தலைவிதியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை அரசுக்குண்டானது. சமாதான முயற்சிகள் எதிலும் ஈடுபடாது யுத்தமே ஒரேபாதை என ஒரு அரசு தீர்மானித்திருந்தால், அது நீதிக்குப் புறம்பானது. ஆனால் யுத்த வெறியர்களான புலிகள் இலங்கையிலிருந்த அரசுகள் ஒவ்வொன்றையும் 'சமாதானம்' என்ற போர்வையில் ஏமாற்றிக்கொண்டு போரைத் தொடர்கையில் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசுக்கு வேறு தெரிவுகள் இருக்க முடியாது. இலங்கையில் அததான் நடந்தது.

அதுவும் தாம் யுத்தத்தில் வெற்றியீட்ட முடியாது என்று தெரிந்த பின்பும், புலிகள் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களை தமது பாதுகாப்புக் கேடயமாக ஒரு சிறிய பிரதேசத்துக்குள் பிடித்து வைத்திருந்தது மட்டுமல்லாமல், தமது பிடியிலிருந்து தப்பியோட முயற்சித்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்த செயலானது, பாரிய யுத்தக்குற்றச் செயலாகும். எனவே இங்கு இரண்டு விடயங்களை சம காலத்தில் எடுத்து போர்க்குற்ற விசாரணையை மேற்கொண்டால், அது நீதி நியாயமானதாக இருக்கும்.

அதாவது, இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை கோருபவர்கள் முதலில் தாங்கள் பல்லாண்டுகளாக இலங்கை உட்படப் பல்வேறு நாட்டு மக்கள் மீது மேற்கொண்ட மானிட விரோதச் செயல்கள் பற்றி ஒரு முழுமையான விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதில்லாமல் அவர்களே குற்றவாளிகளாக இருந்து கொண்டு, தம்மைவிடச் சிறிய குற்றம் செய்தவனைத் தண்டிக்கப் புறப்படுவது, தெருச்சண்டித்தன அடாவடித்தனதே தவிர வேறல்ல.

அடுத்ததாக, இறுதிக்கட்டப் போரின் போது மட்டுமின்றி, 30 வருடப் போர் நடைபெற்ற காலம் முழுவதும் இலங்கை அரச படையினரும், புலிகள் இயக்கமும் (இதில் வேறுபல இயக்கங்களின் மக்கள் விரோதச் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட வேண்டும்) மேற்கொண்ட மானிட விரோதச் செயல்கள் முழுவதும் விசாரிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் போருடன் சம்பந்தப்படாத, வெறுமனே முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்த ஒரே காரணத்துக்காக புலிகளால் கொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் நிலைமை ஆராயப்படுவது அவசியம். இந்த விசாரணைகளின் போது இந்திய அமைதிப்படையின் மக்கள் விரோதச் செயற்பாடுகள் ஆராயப்படுவதும் அவசியம்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, தமது சர்வதேச அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இலங்கை அரசு மீது மட்டும் போர்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதும், அதற்காக சர்வதேச விசாரணை நடாத்த வேண்டும் எனக் குரலெழுப்புவதும், நீதியான, முறையான செயற்பாடு அல்ல. எனவே உள்நோக்கத்துடன் உலகின் மிகப்பெரிய வல்லாதிக்க சக்திகள் மேற்கொள்ள முயலும் இந்த வகையான செயற்பாடுகளை அனைத்து இலங்கை மக்களும், நீதியை விரும்பும் அனைத்துலக மக்களும் எதிர்க்க வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ் தேசியக் தேசியக் கூட்டமைப்பும், அதன் கட்டுப்பாட்டில் உள்ள வட மாகாண சபையும் எடுத்தவரும் தேசத்துரோக நிலைப்படுகளையும் மக்கள் எதிர்க்க வேண்டும். அவர்களின் நிலைப்பாடு, இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாக எடுத்து வரும் தேசத்துரோக, ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டின் தொடர்ச்சிதான் என்ற போதிலும், அவ்வாறான தேசத்துரொகச் செயலைத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஆதரிப்பது அவர்களது எதிர்காலத்தை நாசமாக்கும் என்பதைத் உணர்வது அவசியம்.

அதேவேளையில், இலங்கைக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகள் மேற்கொண்டு வரும் சீர்குலைவு செயற்பாடுகளையிட்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சந்தர்ப்பவாத நிலைப்பாடு எடுப்பதும், 'எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பழையாக அமைய வேண்டும்' என்ற பாணியில் நடந்து கொள்வது மிகவும் கண்டனத்துக்குரியது.

தேசத்துரோக சக்திகள் வழமைபோல தமது சொந்த இலாபத்துக்காகவும், தமது வெளிநாட்டு எஜமானர்களது நலன்களுக்காகவும், நாட்டுக்குத் துரோகமிழைக்க முயன்றாலும், நாட்டின் அனைத்து மக்களும் எமது தேசத்தின் 2,5000 வருட கால அந்நிய ஆதிக்க எதிர்ப்புப் பாரம்பரியத்தைப் பேணி, தமது தாய்நாட்டைப் பாதுகாக்க ஒரே அணியில் திரள்வது இந்த நெருக்கடியான நேரத்தில் காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும்.. *


படிப்பகம்

www.padippakam.com

🍁🍁 'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada 🍁🍁
🍁🍁 வானவில் 🍁🍁

## கடைசிப் பக்க குறிப்புகள்:
# மனோ கணேசன் தமிழ் மக்களின் பிரதிநிதியா அல்லது ஐதேகவின் பிரதிநிதியா?

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி நடைபெறப்போகும் மேல் மாகாணசபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்காமல் தனித்துப் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளது. இதுபற்றி மனோ கணேசன் பெருமையும் பட்டுக் கொண்டிருக்கிறார். அதுமாத்திரமின்றி, சில தினங்களுக்கு முன்னர் விடுத்த ஒரு அறிக்கையில் நீலம், பச்சை, சிவப்பு எல்லா நிறங்களுமே தமிழர்களைப் பொறுத்தவரை ஒன்றுதான் என வேதாந்தம் வேறு பேசியிருக்கிறார்.

அதன்மூலம் அவர் சொல்ல வருவது என்னவென்றால், தமிழர்களைப் பொறுத்தவரை சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் ஒன்றுதான், அவர்கள் ஒருவரையும் தமிழர்கள் நம்பக்கூடாது என்ற சங்கதியைத்தான்.

ஆனால் ஐ.தே.கவை தனது பூர்வீக நட்புச் சக்தியாக வரித்து வைத்திருந்த மனோ கணேசன், தான் தினசரி விடுக்கும் ஊடக அறிக்கைகளில் எடுத்ததெற்கெல்லாம் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைத் தாக்குவதை மட்டுமே தனது தொழிலாகக் கொண்டிருந்தார். ஆனால் இப்பொழுது நீலம் சிவப்புடன் பச்சையையும் (ஐ.தே.க) ஏகத்துக்கு வசை பாடியிருக்கிறார்.

ஐ.தே.கவுடன் அவருக்கு ஏற்பட்ட ஊடலுக்கு அரசியல் முரண்பாடு எதுவும் காரணமாக இருக்க முடியாது என்பதை, மனோ கணேசனை அறிந்தவர்கள் நன்கறிவர். ஏனெனில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற மத்திய மாகாணசபைத் தேர்தலில் கூட, அவரது கட்சி வேட்பாளர்கள் ஐ.தே.கவின் யானை சின்னத்தில்தான் போட்டியிட்டிருந்தனர். மனோ கணேசன் கூட ஐ.தே.கவின் சின்னத்தில் போட்டியிட்டே ஒருமுறை கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், ஒருமுறை அவர் ஐ.தே.கவுடன் முரண்படுவது போல சில விடயங்களைக் கதைத்த போது, அதுபற்றி ஊடகவியலாளர் ஒருவர் வினவ, 'தன் கையாலேயே தன் கண்ணைக் குத்த முடியுமா?' என வினவி, தானாவது ஐ.தே.கவுக்கு எதிராகப் போவதாவது என்ற கோதாவில் பதில் அளித்திருந்தார்.

"சீ..சீ.. இந்தப் பழம் புளிக்கும்" என, திராட்சைப் பழத்துக்கு ஆசைப்பட்ட நரியொன்று, எவ்வளவோ முயன்றும் அது கிடைக்காத போது சலிப்புடன் சொன்னதாக ஒருகதை உண்டு. அந்த நிலைதான் இப்பொழுது மனோ கணேசனுக்கும் ஐ.தே.க சம்பந்தமாக ஏற்பட்டு இருக்கின்றது. அதற்குக் காரணம், மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தனது கட்சி ஆட்களுக்கு ஐ.தே.க போதிய இடங்கள் ஒதுக்காததுதான் அக்கட்சி மீது மனோ கணேசனுக்கு வந்த கசப்பு.

ஊட்பூசல்களால் திண்டாடும் ஐ.தே.கவின் பலவீனமான நிலையைப் பயன்படுத்தி, அக்கட்சியிடம் தனது கட்சிக்கு அதிக வேட்பாளர்களைப் பெற்றுக்கொள்ள மனோ கணேசன் திட்டமிட்டு இருந்திருக்கலாம். ஆனால் தனது கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபை முதல்வர் முஸம்மில் அவர்களது பாரியாருக்கே வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுக்க முடியாத நிலையில் கோஸ்டி மோதல்களால் சீரழிந்து போயிருக்கும் அக்கட்சி, மனோ கணேசனின் 'பொரிமாத்தோண்டி' பேராசையை நிறைவேற்றுவது எப்படி?

மற்றும்படி ஐ.தே.கதான் தமிழர்களுக்கு எதிராக அனைத்து இனவன்செயல்களையும் நடாத்தியது என்பது பற்றியோ, யாழ்.பொது நூலகத்தையும், யாழ்.நகரத்தையும், யாழ்.தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வே.யோகேஸ்வரனின் வீட்டையோ தீயிட்டுக் கொளுத்தியது என்பது பற்றியோ, இனப்பிரச்சினையை அக்கட்சி அரசுதான் யுத்தமாக மாற்றியது என்பது பற்றியோ, மனோ கணேசனுக்கு ஐ.தே.கவுடன் எவ்விதமான முரண்பாடும் கிடையாது. மாகாணசபைத் தேர்தலில் தனது கட்சிக்கு போதிய இடம் ஒதுக்கப்படவில்லை என்பததான் அவருக்குள்ள ஒரே பிரச்சினை.

இன்னொரு விடயம், மேல் மாகாணத்தில் வாழ்கின்ற வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் என்பவற்றைச் சேர்ந்த அனைத்துத் தமிழ் மக்களுக்கும் தான்தான் ஏகப்பிரதிநிதி என்ற நினைப்பில்தான் மனோ கணேசன் தனது அரசியல் நடவடிக்கைகளை அங்கு முன்னெடுத்து வருகின்றார். வடக்கு கிழக்கு மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது மலையகத்தின் பிரதான கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரசோ, மேல்மாகாணத்தில் ஏதாவது தேர்தல்களில் போட்டியிட்டால், அவர்களைத் தனது பரம விரோதிகளாகவே மனோ கணேசன் நோக்குவார்.

உதாரணமாக, சில வருடங்களுக்கு முன்னர் தமிழரசுக்கட்சி கொழும்பில் தனது கிளையொன்றை அமைத்த போது, அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் அறிக்கை விடுத்தார். இலங்கையில் 2,500 வருடப் பாரம்பரியமுள்ள ஒரு இனத்தின் பிரதிநிதியான தமிழரசுக்கட்சி, தனது நாட்டின் தலைநகரில் கிளையொன்றை அமைப்பதைத் தடுக்கும் அதிகாரத்தை, இந்தக் கற்றுக்குட்டி அரசியல்வாதி மனோ கணேசனுக்கு யார் கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை.

இந்த இலட்சணத்தில், எல்லாத் தமிழ் மக்களும் இன்றைய அரசாங்கத்துக்கு எதிராக (ஐ.தே.க எதிராக அல்ல) ஐக்கியப்பட வேண்டும் என அடிக்கடி அறிக்கைப் போர் மட்டும் நடாத்திக் கொள்வார். உண்மை என்னவெனில், மனோ கணேசன் தமிழ் மக்களின் எந்தவொரு பிரிவினரதும் பிரதிநிதி அல்ல. அவர் ஏகாதிபத்திய சார்பானதும், பிற்போக்கானதும், தமிழின விரோதமானதுமான ஐ.தே.கவின் பிரதிநிதி மட்டுமே. அவர் போடும் தமிழின காப்பாளன் வேசம் ஒரு கவசம் மட்டுமே.

எனவே எதிர்வரும் மேல்மாகாணசபைத் தேர்தலில் மேல் மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்களின் நன்மை கருதி, மனோ கணேசனின் வேட்பாளர்களைத் தோற்கடிக்கும் கடமையை அங்கு வாழும் தமிழ் மக்கள் நிறைவேற்ற வேண்டும். பணபலத்தாலும், ஊடகப் பிரச்சாரத்தாலும், ஐ.தே.க பின்னணி ஆதரவாலும் தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என மனப்பால் குடிக்கும் மனோ கணேசனின் கபட நோக்கத்தைத் தவிடுபொடியாக்குவது மானமுள்ள ஒவ்வொரு மேல் மாகாணத் தமிழனதும் தலையாய பணியாகும். *


படிப்பகம்